கெஸட்டியர்களை மீண்டும் புதுப்பித்து அந்த அந்த மாவட்டங்கள் பற்றிய வரலாறுகளையும் தொகுத்து வெளியிடும் வேலையினையும் இந்தக் குழு ஆராய்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இதற்கான தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ் நாட்டு வரலாற்று நூலை வெளியிடுவதற்கு அரசு எப்போது ஆணையிட்டது ? இதுவரையிலே அதற்காக எவ்வளவு செலவழிக்கப்பட்டது, எவ்வளவு செலவழிக்க வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது ? கலை, பண்பாடு, கலாசாரம் போன்றவற்றோடு ஆட்சி மாற்றத்திற்கான எல்லா விவரங்களும் இந்த நூலிலே இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–20.]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18–8–1970-ல் எடுக்கப்பட்ட முடிவை அடிப்படையாக வைத்துத்தான், இந்த முயற்சி தொடங்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வரலாறு என்கிற அடிப்படையில் என்னென்ன செய்திகள் தேவையோ அவைகளையெல்லாம் தொகுத்து அவர்கள் தருவார்கள்.

உயிர்நிலைப் பள்ளிகளில் வரலாறு—புவியியல் பாடங்களைத் தனித்தனியே கற்பிக்கும் திட்டம்.

*வினா எண் 954.—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளில் வரலாறு—புவியியல் ஆகிய இரு பாடங்களையும் ஒன்றாக இணைத்து கற்பிக்கும் நடைமுறையை மாற்றி ஒவ்வொரு பாடத்தையும் தனித்தனியாக கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பள்ளிகளில் வரலாறும் புவியியலும் தற்பொழுதே தனித்தனி பாடங்களாகத்தான் கற்றுத் தரப்படுகின்றன. தேர்வுகளில் மட்டும் இரண்டு பாடத்திற்கும் சேர்த்து மொத்தம் மதிப்பெண் 100 கொண்ட ஒரே கேள்வித்தாள் என்று இருந்தாலும், அதில் வரலாற்றுக்கு 50, புவியியலுக்கு 50 என்று தனித்தனியாகத்தான் கேள்விகளும் கேட்கப்படுகின்றன,

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒவ்வொரு பாடத்திற்கும், 100 மதிப்பெண்கள் என்று வைத்திருக்கிறபோது, குறிப்பாக வரலாற்றுக்கும், புவியியலுக்கும் ஏன் 50, 50 மார்க்குகள் வைக்க வேண்டும். வரலாறும், புவியியலும் ஒரு நாட்டிற்கு முக்கியமான பாடங்களாக இருக்கிற காரணத்தால், வருங்காலத்திலாவது அதைத் தனித் தனியாகப் பிரித்து, ஒவ்வொன்றிற்கும் 100; 100 மதிப்பெண்கள் வைத்து , அந்தப் பாடங்களை விரிவாக நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே அவைகள் விரிவாகத்தான் நடந்துக் கொண்டிருக்கின்றன. தனித்தனியாகத்தான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். 1949—50-க்கு முன்னாலே அவைகள் தனித் தனியாக இல்லை. அப்போது சோஷியல் ஸ்டடீஸ் என்ற வரலாற்றையும் கலந்து ஒரே பாடமாக நடத்திக் கொண்டிருந்தார்கள். இப்போது அதற்குப் பிறகு தனித் தனியாகத்தான் நடத்தி கொண்டிருக்கிறார்கள். தனித் தனியாகப் பார்க்கும்போது, ஒவ்வொரு பாடமும் முக்கியமாகத்தான் தோன்றும். எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கிறபோது, இது மிகவும் முக்கியம். அதற்குப் பிறகு, இன்னொன்று என்று வரிசைப்படுத்தி, அந்த அடிப்படையில் பார்க்கிறபோது, வரலாற்றுக்கும், புவியியலுக்கும் 50, 50 மார்க்குகள் என்று வைத்து நடத்துவது இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் நல்லது என்று கருதித்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டு, அது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதிலே மாற்றம் தேவையில்லை என்றுதான் கல்வித் துறையும் கருதுகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

க. பரமத்தி உயர்நிலைப் பள்ளி.

* வினா எண் 955—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்டவினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், க. பரமத்தி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளி ஆக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.